**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா 17/02/2017**

**(19 Jamadul' Awwal 1438 HIJRI)**

# "MUSLEH MA'UD (AS)"

# "முஸ்லிஹ் மௌஊத்"



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவசும் சூராஅல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தன் உரையினை ஆரம்பித்தார்.



வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)மின்(Second Successor) இரண்டாம் பின்தொடர்காரராகயிருந்தார், ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹமது (ரலி) அவர்கள்.

அன்னார் மிக பிரபலமான ஒரு கலீ∴பாவாகயிருந்தார். அன்னாரின் பிறப்பைப் பற்றி முன் கடந்து சென்ற ஏராளமான தீர்க்கதரிசிகளும் சூபியாக்களும் முன் கூட்டியே கூறியிருந்தனர். மட்டுமின்றி அன்னார் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) முடையவும் இஸ்லாமுடையவும் உண்மையினை நிருபிக்கும் ஒரு இறையடையாளமாக திகழ்ந்தவர். ஹோஷியார்பூரில் வைத்து 40 நாள்கள் செய்த பிரார்த்தனையின் பலனாக, அதைப் பற்றிய அறிக்கை அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது. ஒன்பது வருடங்களுக்குள் ஒரு பரிசுத்த மகன் பிறப்பதாக எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கு (அஹ்மது(அலை)) நற்செய்தி வழங்கினான். 1886 பிப்ரவரி 20-ம் தேதி வாக்களிக்கப்பட்ட சீரமைப்பாளரைக் குறித்த தீர்க்க தரிசனத்தை அன்னார் வெளியிட்டார். இந்த இறைத் தீர்க்க தரிசனத்தின் விடியலாக, அத்தீர்க்க தரிசனத்தில் கூறப்பட்டிருந்த காலஅளவிற்குள்ளேயே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மின் வாக்களிக்கப்பட்ட புதல்வன் 1889 ஜனவரி 12-ம் தேதி காதியானில் பிறவியெடுத்தார். அன்னாருக்கு பஷீருத்தீன் மஹ்மூத் அஹமது என பெயர் சூட்டப்பட்டது. வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தாளராகிய வாக்களிக்கப்பட்ட மகனின் சில குணமேன்மைகளைப்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. உதாரணமாக **அன்னார் மிக சிறந்த புத்திசாலியாகயிருப்பார் என்றும் உன்னதமான பண்டிதராகயிருப்பார் என்றும் அன்னாரின் புகழ் பூமியின் எல்லா பகுதிகளையும் சென்றடைந்துவிடும் என்றும் அன்னார் வழியாக உலகம் அருளுக்குரியதாகிவிடும் என்றும் தீர்க்க தரிசனம் செய்யப்பட்டிருந்தது.** நமக்கு அன்னாரின் வாழ்க்கை வரலாற்றினை சுருக்கமாக ஒன்று பார்வையிடுவோம். ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) என்ற நபர் மூலமாக இந்த தீர்க்க தரிசனம் எவ்வாறு முழுமைப் பெற்றது என்பதை பார்ப்போம்.

அன்னாரின் முதல் கல்வி காதியானை சார்ந்த ஒரு பள்ளிக்கூடத்திலும் தொடர்ந்து “தஆலீமுல் இஸ்லாம்” பள்ளிக்கூடத்திலுமாகயிருந்தது. 1898-ம் ஆண்டிலாகும் தஆலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடம் காதியானில் அமைந்தது. அன்னாருக்கு கல்வியில் நன்கு முன்னேற்றமடைய இயலவில்லை. 1905 மார்ச் மாதம் இறுதியில் அன்னாரின் கல்வி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. மெட்ரிக்குலேஷன் (10-ம் வகுப்பு) பரீட்சையில் தோல்வியடைந்தார். பரீட்சையில் தோல்வியடைவதற்கும் சுமார் இரண்டு வருடத்திற்கு முன்னதாகவே சய்தா: மஹ்மூதா பீகம் சாஹிபா (ஹஸ்ரத் உம்முன்னாசிர் (ரலி)) அவர்களை அன்னார் மணந்தார்.

திருக்குர் ஆனும் திரு நபி வசனங்களும் மொழியாக்கம் செய்வதற்கான கல்வியை, ஹஸ்ரத் மௌலானா நூறுத்தீன் (ரலி) விடமிருந்து கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அவ்வாறு அவர் ஒரு மாபெரும் பண்டிதராக வளர்ந்து, உயர்ந்து கொண்டார். பல்வகை விஷயங்களில் மிக திறமைப் பெற்றவராக திகழ்ந்தார்.

**“மிகுந்த புத்திசாலியாகயிருப்பார்” “பண்டிதராகயிருப்பார்” “பொறுமையுடையவராகயிருப்பார்” “பௌதீகவும் ஆன்மீகவுமான ஞானத்தால் வல்லமைப் பெற்றவராகயிருப்பார்”** என்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)மின் தீர்க்கதரிசனம் வாக்களிக்கப்பட்ட இந்த நபர் வாயிலாக மிக தெளிவான நிலையில் முழுமையடைந்து கொண்டது.

1905-ம் ஆண்டு அன்னாருக்கு முதல்முறையாக இறைவெளிப்பாடுகள் கிடைத்தது. அன்று அன்னாருக்கு பதினாறு வயதாகயிருந்தது. **“இறுதிநாள் வரையிலும் உன் மீது நம்பிக்கை கொண்டோர்களை, உன்னை நிராகரித்துக் கொண்டோர்களுக்கு மேலாக மேன்மையளிப்பேன்”.** 1907-ம் ஆண்டு திருக்குர் ஆனின் முதல் அதிகாரமாகிய சூர.ஃ. அல்பாத்திஹாவின் விளக்கத்தை ஒரு மலக்கு அன்னாருக்கு கற்பித்தது. அன்று முதல் திருக்குர்ஆனை பற்றிய அசாதாரணமான ஞானத்தால் வனப்புடையவராக பரிணமித்தார்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)மின் வபாத்து வேளையில் ஹஸ்ரத் முஸ்லீஹ்மௌஊத் (ரலி) அவர்களுக்கு 19 வயதாகயிருந்தது. இந்த தீர்வான, நிகழ்கட்டத்தில் வபாத்தான தன் தந்தையாரின் மய்யத்திற்கு அருகாமையில் நின்றுக் கொண்டு இவ்வாறு சபதம் செய்தார். **“உங்களை (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) அனைத்து மக்களும் கைவிட்டுக் கொண்டாலும் உலகில் அவர்களின் எதிர்பிற்கோ பகைமைக்கோ அஞ்சிக்கொள்ளாமல், நான்மட்டுமாகயிருந்தாலும் சரி இந்த உண்மைக்காகவே நிலைகொள்வேன்”**

1911 பிப்ரவரி மாதம் அன்னார் அன்சுமன் அன்சாறுல்லாஹ் அமைப்பினை ஆரம்பித்தார். 1912 செப்டம்பர் மாதம் ஹஜ்ஜீக்கா மக்காவில் சென்றார். 1913-ம் ஆண்டு அல்பசல் எனும் மாத இதழ் வெளியீடை ஆரம்பித்தார். 1914 மார்ச் மாதம் 14-ம் தேதி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மின் முதல் கலீபத்துல் மஸீஹ் “அவ்வலின் வபாத்தையொட்டி ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் (ரலி) அவர்களை கலீ.ஃ.பத்துல் மஸீஹ் இரண்டாமனாக ஒற்றுமையுடன் தேர்வுசெய்யப்பட்டது. அன்று அன்னாருக்கு 25 வயதாகயிருந்தது. இந்த சந்தர்பத்தில் சுமார் 2000 அஹ்மதி முஸ்லீம்கள் அங்கு வருகை தந்திருந்தனர். அவர்கள் அனைவரும் அன்னாரின் கரங்களில் பை-அத்து செய்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் கலீபத்துல் மஸீஹ் இரண்டாமனுடைய சிறந்த தலைமையின் கீழ் அஹ்மதியா சமூகம் முன்னேற்றத்தின் மலை உச்சியை அடைந்தது. அன்னாரின் கில.ஃ.பத் 52 வருட காலம் நீடித்தது. அக்காலஅளவு அசாதாரணமும் மகத்துவம் வாய்ந்ததுமான வெற்றியுடையவும் பரிணாமங்களுடையவும் காலமாக இருந்தது. அது இறை உதவியால் நிருபித்துவிட்டதுமாகும். அன்னாரின் கில.ஃ.பத்தின் முதல் நாளிலிருந்தே சமுதாயத்தை ஒன்றிணைத்துக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தது. அன்னாருக்கு எல்லாவித இடையூறுகளையும் எளிதில் வெல்ல முடிந்தது. ஒருமை நிலை நாட்டப்பட்டது. உலகம் முழுவதும் இஸ்லாமை பரவச்செய்வதற்கான மிக சிறந்த

திட்டங்களுக்கு அன்னார் வழிவகுத்தார். அவ்வாறு **வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தாளர்** என்ற தீர்க்க தரிசனம் மகத்தானதும் முழுமைபெற்றதுமான நிலையில் பூர்த்திகரிக்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்.




**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam**
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**

**Azim Ahmad**

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817